RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2415

OPEN ACCESS

# காலந்தோரும் இலக்கியத்தில் பெண்குறித்த பாடுபொருள்

**கோ. சவிதா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, அதியமான் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சீனிவாசா நகர்-635207, தமிழ்நாடு, இந்தியா.

# About Feminism in Kalanthorum

**G. Savitha** [a, *]

[a] Department of Tamil, Adhiyaman Arts & Science College for women, Srinivasanagar-635207, Tamil Nadu, India

* Corresponding Author: gsavitha85@gmail.com

Received: 11-10-2023
Revised: 17-12-2023
Accepted: 03-01-2024
Published: 20-01-2024

Check for updates

**ABSTRACT**

Even today many of the educated men still use the same retrogressive methods in approaching women. Tamil heritage, Tamil culture has been created by men. Due to this in modern life women are facing many problems and are forced to destroy themselves due to some diseases. From time to time sufferings of female, their characteristics and so on has been recorded. Feminists understood the problems of women, freed them from the problems and gave voice to women to get all the rights as equal to men. In that case, what were the rights of the woman in the society? How were they wrapped up in the blanket of tradition? This article examines how women are portrayed from Ancient literature to modern literature.

**Keywords:** Woman, Tradition, Tamil Heritage, Feminists, Problems

## முன்னுரை

முற்போக்கான சிந்தனை கொண்ட, கற்றறிந்த ஆண்களில் பலரும் பெண்ணை அணுகும் நிலையில் பிற்போக்கான பழமைவாய்ந்த முறைகளையே தற்காலத்திலும் கையாண்டு வந்துள்ளனர். தமிழ்மரபு, தமிழ்ப்பண்பாடு என்ற நிலை ஆண்களால் உருவாக்கப்பட்டிருக்கிறது. இதனால் வாழ்க்கையில் தற்காலத்தில் பெண்கள் பல சிக்கல்களுக்கு உள்ளாகி, சிலநோய்களில் தன்னையே அழித்துக்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். காலம்தோறும் பெண் எழுத்துகளின் எண்ணிக்கையும், பாடுபொருளும் பெண்ணின் இயல்பையும் - அல் இருப்பையும் பதிவு செய்து வருகிறது. பெண்களின் பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு, அப்பிரச்சினைகளிலிருந்து அவர்களை விடுவித்து ஆணுக்குரிய எல்லா உரிமைகளையும் பெண்ணும் பெற்று வாழவேண்டுமென்று பெண்ணியவாதிகள் குரல் கொடுத்தனர். அந்நிலையில் பெண்ணிற்கு சங்கச் சமூகத்தில் இருந்த உரிமைகள் எவை? மரபு என்ற போர்வைக்குள் எவ்வாறு போர்த்தப்பட்டார்கள்? இலக்கியங்கள் முதல் நவீன இலக்கியங்கள் வரை பெண் எவ்வாறு சித்தரிக்கப்பட்டாள் என்பன இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

## சங்கச் சமூகப்பெண்

தாய்வழிச் சமூக அமைப்பில் பெண்ணுக்கு முதன்மை இடம் கொடுக்கப்பட்டது. தாய் தெய்வ வழிபாடும் பெண்மையை முதன்மைப்படுத்தியது. தமிழிலக்கியங்களில் கொற்றவை வழிபாடு தாய்தெய்வத்தின் சிறப்பை உணர்த்துகின்றது. ஆனால் தந்தை வழி சமூகம் பெண்ணுக்கு முதன்மை

அளிக்கவில்லை. அங்கு ஆணின் அதிகாரமே முன் நிற்கின்றது. ஆண் தன்னிலிருந்து வேறுபட்டவளாக பெண்ணைக் காணுகின்றான்.

சிமென்திபவார் "ஆண் தன்னிலிருந்து வேறுபட்டவள் தான் பெண் எனக் கருதுகிறான் எனவும், பெண்ணைப் பற்றிக் கூறும் போது பெண் அவளாகப் பார்க்கப்படுவதில்லை. ஆணின் பிம்பமாக (Model) மட்டுமே பார்க்கப்படுகிறாள். அவள் தன்னிவைக்கான பொருளாக விளங்குகிறாள்" என்று கூறியுள்ளார். இக்கூற்று தந்தை வழிச் சமூகப் பெண்ணிற்குப் பொருந்துவதாக உள்ளது. சங்ககாலம் அரசு எந்திரத்தின் ஆதிக்கம் அற்ற காலம். ஆண்பாற் புலவர்களைப் போல் பெண்பாற்புலவர்களும் பாடியுள்ளனர். பாலினமுரண்பாடுகள் வெறிபிடித்த அதிகாரமாய் உருப்பெறாத காலம். எனவே இயற்கையை அடிப்படையாக்க் கொண்டு கட்டற்ற மனநிலையில் கணிசமாகப் பாடினர். சங்கப் பெண்களின் அகப்பாடல்களின் வெளி குடும்பத்தில் தொடங்கி குடும்பத்திற்குள் அமைந்துவிடுகிறது. புறம் பாடிய ஔவை மற்றும் பிற்காலத்து ஔவைகள் "தமிழ்ப் பெண் அறிவு" மற்றும் "பெண் விடுதலை" என்பவற்றின் குறியீடாக அமைந்தனர் என்பதை அறியமுடிகின்றது.

பொருளாதார உற்பத்தியில் பெண் உழைப்பவளாக இருந்த போதிலும் அதிகமாக வீட்டுப்பணியில் ஈடுபடுவதையே சமூக விதியாக ஆணாதிக்கச் சமூகம் மாற்றிவிட்டது. இத`னை,

"வினையே ஆடவர்க்கு உயிரே வாள்நுதல்

மனைஉறை மகளிர்க்கு ஆடவர் உயிர் என

நமக்கு உரைத்தோரும் தாமே,

அழாஅல் தோழி அழங்குவர் செலவே" (குறுந் -135)

என்ற குறுந்தொகைப் பாடல் வெளிப்படுத்துகின்றது.

"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்

கழுவுறு கலிங்கம், கழா அது உடீஇ,

குவளை உண்கண் குய்ப்புகை கழுமத்

தான்துழந்து அட்ட தீம்புளிப் பாகர்

'இனிது' எனக் கணவன் உண்டலின்

நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே" (குறுந் . 167)

என்ற பாடல்வரிகள் ஆணை சார்ந்தே பெண்ணின் மகழ்ச்சியும் உள்ளது என்ற நிலையை வெளிப்படுத்துகின்றது.

சங்கப் பெண் கவிஞர்களின் கவிதைகளில் தந்தைவழிச் சமூகப் போக்குகள் முதன்மை இடம் பெற்றாலும், தாய்வழிச் சமூகத்தின் எச்சங்களும் ஆங்காங்கே பதிவாகி உள்ளன. வீரத்தை ஊட்டி வளர்பவளாக சங்க்காலப் பெண் சித்தரிக்கப்பட்டாள். 'செருமுகம் நோக்கிச் செல்க' எனப் போருக்கு வழியனுப்புவளாகப் பெண் இருந்தாள். அவளின் உரிமைத் தடை செய்யப்படவில்லை. கல்வி கேள்விகளில் புலமை பெற்றவளாகவே இருந்தாள். பெண் பிறவி இழிவிற்குரியது என்று யாரும் கருதவில்லை. இதனையே,

"குன்றக் குறவன் கடவுட் பேணி,

இரந்தன்ன் பெற்ற எல்வளைக் குறுமகள்

ஆய்அரி நெடுங்கண் கலிழ,

சேயதால் தெய்ய நீ பிரியும் நாடே" (ஐங் - 257)

என்ற பாடல் உணர்த்துகின்றது.

வரதட்சனை கொடுமை சங்கச் சமூகத்தில் பெண்ணிற்கு இருக்கவில்லை என்பதை,

“நலம்சால் விழுப்பொருள் கலம்நிறை கொடுப்பினும்

பெறல் அலங்குரையள்” (அகம் .280 : 5-6)

என்ற அகநானூற்றுப் பாடல் புலப்படுத்துகின்றது. இவ்வரிகள் பெண்ணிற்கு ஆண் பொருள் கொடுத்து மணந்த நிலையை வெளிப்படுத்துகின்றன. பெண்ணுக்குப் பெருமை தேடித்தரும் நிலையிலும் அவள் இவ்விலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளாள்.

“ஓவத்து அன்ன வினைபுனை நல்இல்,

பாவை அன்ன நல்லோள் கணவன்” (பதிற்.61 : 3-4)

என்று பதிற்றுப்பத்தும்,

‘மறுஇல் கற்பின் வாள்நுதல் கணவன்’ (திருமுருகு. 6)

என்ற திருமுருகாற்றுப்படையும் பெண்ணுக்குப் பெருமை தேடித் தருகின்றன.

பெண் படைப்பாளர்கள் தம் உடலினைப் படைப்பின் வழியாகப் பதிவு செய்தல்

சங்க காலத்திலேயே தொடங்கியுள்ளது. மரபினுக்கு மாறாக காதல் உணர்வினையும், காம வேட்கையையும் மனத்தடைகளற்று வெளிப்படையாகக் கவிதையாக்கி இருப்பது பெண் கவிஞர்களின் தனிச்சிறப்பாகும்.

“ஈன்று புறந்தருதல் என்தலைக்கடனே

சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே

வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே

நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே

ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கி,

களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே”

என்ற பாடல் பெண் கவிஞர்களின் சமூக உணர்வை வெளிப்படுத்துவதாக உள்ளது. பெண் கவிஞர்கள் இத்தகைய பாடல்களைப் பதிவு செய்ய, சங்க ஆண் புலவர்களோ பெண்ணுக்குப் பல கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர் (Ilampuranar, 1971).

“கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்

மெல்லியற் பொறையும், நிறையும் வல்லிதின்

விருந்து புறத்தருதலும், சுற்றம் ஓம்பலும்

பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்”

“தாய்போல் கழறித் தழீஇக் கோடல்

ஆய்வினைக் கிழத்திக்கும் உரித்தென மொழிப

கவ்வொடு மயங்கிய காலையான”

“கற்பு வழிபட்டவள் பரத்தை ஏத்தினும்

உள்ளத் தூடல் உண்டு என மொழிப”

என்று தொல்காப்பியர் பெண்ணுக்கு வகுத்த இலக்கணங்களோடு சங்கச் சமூகப் பெண் வாழ்ந்தாள் (Ilankumaranar, 2018).

“வாழி ஆதன்! வாழி அவினி!

நெல்பல பொலிக! பொன் பெரிது சிறக்க!

எனவேட்டோளே, யாயே யாமே

நனைய நாஞ்சிச் சினைய சிறுமீன்

யாணர் ஊரன் வாழ்க!

பாணனும் வாழ்க! எனவேட்டேமே”

என்ற பாடல் வழி பரத்தையர் ஒழுக்கத்தை நேரடியாகக் கடியவில்லை என்றாலும் கூட தலைவனின் போக்கை மனதார அவள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை இப்பாடலில் வரும் நறுமணம் கமழும் காஞ்சி மலர்களும், புலால் நாற்றம் வீசும் மீன்களும் ஒக்க விளையும் ஊரன் எனத் தலைவனைச் சுட்டியது, அவன் கற்புக்கடம் பூண்ட குலமகளிரையும், இழிந்த பரத்தையரையும் ஒரு நிகராகக் கொண்டு வாழ்கிறான் என்பதை உள்ளுறுத்துவதாக உள்ளது. இவையெல்லாம் சங்கச் சமூகம் ஆணுக்கு நிகராகப் பெண்ணைப் படைக்கவில்லை என்பதை உணர்த்துகின்றன (Sadasiva Iyer, 1999).

## அற இலக்கியப் பெண் சமூகம்

அறநெறிக்காலத்தில் பெண்ணின் இருப்பு கேள்விக்குள்ளாகத் தொடங்கும் காலமாக அமைகிறது. சங்க காலத்தில் கவிதை புனையும் அளவு கல்வியறிவோடு திகழ்ந்த பெண்களின் நிலை அதற்குப் பின்னர் வீழ்ச்சி அடைந்தது. திருக்குறள் முதலான நீதிநூற்கள் பெண்களுக்கு தாராளமாக அறிவுரை வழங்கின.

“தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற

சொற்காத்துச் சோர்விலாள் பெண்”

என்று தன்னையும் காத்து தன்னைக் கொண்டவனையும் பேணுபவளாகப் பெண் இருக்க வேண்டும் என்று குறள் கூறுகின்றது (Varadharasan, 2004).

“பொருட்பெண்டிர் பொய்மை முயக்கம் இருட்டறையில்

ஏதில் பிணந்தழீஇ யற்று”

என்று பரத்தையரின் தழுவலைப் பிணம் தழுவியதற்கு ஒப்பாக வள்ளுவர் கூறியுள்ளார். ஆசாரக்கோவை பெண் கடைப்பிடிக்க வேண்டிய ஆசாரங்களைப் பட்டியலிட்டுள்ளது. காப்பியங்கள் பெண்ணின் உடல் உயிர் இரண்டுமே ஆயுக்குள் அடங்க வற்புறுத்தும் அல் இருப்புகளாகவே உள்ளன.

## பக்தி இலக்கியப் பெண் சமூகம்

தமிழிசையின் தாயாகக் கருதக்கூடியவள் காரைக்காலம்மையார் சைவசமய அடியார்களில் இவர் முதன்மையானவர். பெயரற்று ஊர்பெயரால் அழைக்கப்பட்ட இவர் எலும்பும் தோலுமாய்த் திரியும் பைத்தியக்காரியாய் சமயத்தின் கைதியாய் சித்தரிக்கப்படுகிறார். ஆனால் இவர் எழுதிய பாடல்கள் பதினோராம் திருமுறையாகவே சேர்க்கப்பட்டுள்ளது இவர் ஒரு பெண் என்ற காரனத்தினாலோ என்று எண்ணத் தோன்றுகிறது. தன்னுடைய தனிப்பட்ட ஆளுமையினால் இறைவனிடமிருந்து மாம்பழம் பெற்றமையால் குடும்ப நிறுவனத்தைவிட்டு வெளியேற்றப்பட்டிருக்கிறார். தன் பெண்ணுடலைத் தவிர்த்து பேயுருவாக உருவெடுத்த பின்தான் இறைவனை அடைந்தார். இது சமணசமயக் கருத்தான பெண் மோட்சத்தை அடையமுடியாது என்பதை உணர்த்துவதாகவே இருக்கின்றது என்பது அறிஞர் பலர் கருத்தாகும்.

வைணவ நாயகி கோதைப் பிராட்டியான ஆண்டாள் தத்தெடுக்கப்பட்ட காரயத்தினால் யாரும் மணக்க முன்வராத சாதிய அறத்தைச் சாட ‘நாயகன் நாயகி பாவம்’ என்ற தன் காலத்து இலக்கிய வகையைத் தேர்ந்தெடுத்து, ‘மானிடர்க்கு’ வாக்குப்படேன் என்று மானிட காதலை வெறுத்து தெய்வீக காதலில் மூழ்கித் தன் மொழி வழி தன் இருப்பைத் தக்கவைத்துக் கொள்ளும் புத்திசாலிப் பெண்ணாகத் திகழ்ந்துள்ளாள்.

பக்திய இலக்கிய பாடுபொருளில் இக்காலக்கட்டத்து ஆண்கள் பெண் இனத்தை அடிமையாக நடத்தியுள்ளனர். வைதீக மரபை எதிர்க்காமல் காரைக்கால் அம்மையாரும், ஆண்டாலும் ஏற்றுள்ளனர் என்பதை இதன்வழி அறியமுடிகின்றது.

## நவீன மறுமலர்ச்சி காலப் பெண் சமூகம்

சிற்றிலக்கிய காலங்களிலும் அதற்குப் பின்னான மறுமலர்ச்சி காலம் வரையிலும் பெண்ணின் இருப்பிட வெளி சமயலறையும் படுக்கையறையுமாகவே இருக்க நிர்பந்தித்திருந்ததை அக்காலக்கட்ட இலக்கியங்கள் வழி அறியமுடிகிறது.

“நள்ளிரவு நாடகத்தின்

நகைச் சுவையாய் வந்த்தித்த

பிள்ளைக்குப் பாலூட்டும்

பெறும்பேறு பெற்றேனா?

என்றும்

“எனக்கிருக்கும் ஆசையெல்லாம் இதுதான்….அத்தான்!

இரு விழிக்கும் இருக்கைக்கும் இருதோள்கட்கும்

நினைக்க முடியா இன்பம் அளிக்கும் பேசும்

நிலாப் பிச்சைப் பெற்றெடுக்க வேண்டும்”

என்று மறுமலர்ச்சிக் காலக் கவிதைகளில் ஆண்கவிஞர்கள் பெண்ணின் தாய்மையைப் போற்றும் வகையில் பலவீனப்படுத்தியுள்ளதை அறியமுடிகின்றது (Meera & Susila, 2002).

## முடிவுரை

தாய்வழிச் சமூகத்தில் பெண்ணுக்கு முதன்மை கொடுத்துப் பாடிய புலவர்கள் தந்தை வழி சமூகத்தில் பெண்ணைத் தன்னிலிருந்த வேறுபட்டவர்களாகவே கண்டனர். பெண்ணுக்கு மட்டுமல்ல ஆணுக்கும் கற்பும் ஒழுக்கமும் தேவை என்பதை அற இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. நவீன மறுமலர்ச்சி எல்லாத் துறைகளிலும் மாற்றத்திற்கு வழி வகுத்து பெண் இனத்தின் விடுதலைக்கும் வித்திட்டுள்ளது. உடலியல் அறிவு, மரபான மதச் சிந்தனைகளில் மாற்றம், மறுமலர்ச்சி சிந்தனையாளர்கள், சீர்திருத்தவாதிகள் தந்த விழிப்பணர்ச்சி, தகவல் ஊடக்கங்களின் வளர்ச்சி, பெண் கல்வி, கல்வியால் கிடைத்த வேலை வாய்ப்பு, பொருளாதாரச் சுதந்திரம், வெளி உலகத் தொடர்பு, இன்றைய அறிவியல் வளர்ச்சி என பெண்கள் விழிப்புணர்வு அடைந்திருந்த போதிலும் பெண்கள் மீதான பாடுபொருள் மாற்றங்களை வெளிப்படுத்திதான் நிற்கின்றன. பெண்கள் தன் கடமையிலிருந்த தவறுவதை எல்லாக் காலக் கட்டத்திலும் ஏற்றுக்கொள்ளவில்லை.

## References

Ilampuranar, (1971) Tolkappiyam Porulathikaram, Kazhaga veliyedu, Chennai, India.

Ilankumaranar, U.A. (2018) Tolkappiyam – Thelivurai, Fourth Tamil Sangam, Madurai, India.

Meera, Susila, R. (2002) Meera Kavithaikal, Agaram Veliyedu, Thanjavur, India

Sadasiva Iyer, T. (1999) Ainkurunuru Source and text, International Institute of Tamil Studies, Chennai, India.

Varadharasan, M. (2004) Thirukkural Thelivurai, The South India Saiva Siddhantha Works Publishing Society, Tinnevelly, India.

Vennila, A. (2007) Pen Eluthum Kalam, Agani Veliyedu, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License